முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2017 சனவரி

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

(Advanced Financial Accounting)

2017-01-21
முற்பகல்
[8.45 – 12.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசித்து விளங்கிக்கொள்ள : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்புகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப்பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இந்தப் பகுதியிலுள்ள ஏழு (07) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*வினா இலக்கங்கள்* ***1.1*** *முதல்* ***1.3*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்து, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒன்றின்கீழ் ஒன்றாக எழுதி, அவற்றிற்கு எதிரே நீர் தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை எழுதுக.*

**1.1** 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட **ஹார்டி (தனியார்) கம்பனி** ஒரு பொறித்தொகுதியை ரூ. 500,000/- கிரயத்தில் கொள்வனவு செய்தது. இந்தப் பொறித்தொகுதியின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள். பயன்தரும் ஆயுட்கால முடிவில் இதன் மதிப்பிடப்பட்ட ஈற்றுப் பெறுமதி அதன் கிரயத்தின் 10%. தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் அறவிடப்படுகின்றது.

2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தேய்மானம் :

(1) ரூ. 150,000/-. (2) ரூ. 180,000/-.

(3) ரூ. 100,000/-. (4) ரூ. 90,000/-.

(02 புள்ளிகள்)

**1.2** இலாப நோக்கற்ற அமைப்புக்கள் (NPO) தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற்கொள்க :

**(a)** NPO ஒன்று அதன் தொழிற்பாடுகளிலிருந்து ஒருபோதும் மிகையினை ஈட்டாது.

**(b)** NPO க்கள் பெறும் ஒரேயொரு வருமானம், அதன் அங்கத்தவர்களிடமிருந்து பெறும் சந்தாப் பணமாகும்.

**(c)** தொழிற்பாடுகளின் நிகரப் பெறுபேறு ''மிகை'' அல்லது ''பற்றாக்குறை'' என அழைக்கப்படும்.

**(d)** NPO க்கள் அதன் பங்குதாரர்களால் நியமிக்கப்படும் பணிப்பாளர் சபையின் ஆளுகைக்கு உட்பட்டதாகும்.

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் சரியான கூற்றுக்கள் :

(1) **(c)** மற்றும் **(d)** மாத்திரம்
(2) **(a), (b)** மற்றும் **(c)** மாத்திரம்
(3) **(c)** மாத்திரம்
(4) மேலே தரப்பட்டவை எல்லாம்

(02 புள்ளிகள்)

**1.3** கட்டுப்பாட்டுக் கணக்குகள் தொடர்பாக கீழ்வரும் கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன :

**(a)** தனித்தனிக் கணக்குகளுக்கு வெவ்வேறு உப பேரேட்டுக் கணக்குகள் பேணப்படுவதுடன், அவற்றின் கூட்டு மொத்தம் பொதுப் பேரேட்டிலுள்ள உரிய கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்குச் சமமாகும்.

**(b)** தொக்குகளுக்குக்கூட கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்படலாம்.

**(c)** கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு களுக்கு இடையில் பதிவுகள் காணப்படலாம்.

மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் கட்டுப்பாட்டுக் கணக்குகள் பற்றிய சரியான கூற்றுக்கள் :

(1) **(a)** மாத்திரம்
(2) **(b)** மாத்திரம்
(3) **(a)** மற்றும் **(c)** மாத்திரம்
(4) மேற்கூறிய எல்லாம்

(02 புள்ளிகள்)

***1.4*** *முதல்* ***1.7*** *வரையான வினாக்களுக்கான விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குவரிசையில் எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.*

**1.4** கம்பனியொன்று நீண்டகால நிதி மூலங்களைப் பெறுதலில், உரிமையாண்மைப் பங்கு (equity share) வழங்கலுடன் ஒப்பிடுகையில் தனிச்சங்களை வழங்குவதன் அனுகூலங்கள் இரண்டு (02) **குறிப்பிடுக.**
(02 புள்ளிகள்)

**1.5** நீண்டகால நிதி மூலமாக உரிமையாண்மைப் பங்குகளின் அனுகூலங்கள் (advantages) மூன்று (03) **கூறுக.**
(03 புள்ளிகள்)

**1.6** **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியானது** 2016 மார்ச் 20 ஆந் திகதி பங்கொன்று ரூ. 25/- விலைப்படி 250,000 மேலதிக சாதாரண பங்குகளை வழங்குவதற்குத் தீர்மானித்தது. 270,000 பங்குகளுக்காக விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பின்னர் 250,000 பங்குகள் ஒதுக்கப்பட்டதுடன் பெறப்பட்டிருந்த மேலதிக விண்ணப்பங்கள் மீதான பணம் திருப்பிச் செலுத்தப்பட்டது.

மேற்படி பங்கு வழங்கலைப் பதிவு செய்வதற்கு நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் (காசுப் பதிவுகள் உட்பட) **தயாரிக்குக.**
(03 புள்ளிகள்)

**1.7** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை ஒழுங்குச் சட்டத்தின் பிரிவு 24 இன்படி கீழ்வரும் ஒவ்வொன்றிற்கும் ஏற்பாடுகளைக் கூறுக.

(1) புதிய பங்காளரை இணைத்துக்கொள்ளல்

(2) மூலதனத்திற்கும் மேலாக வழங்கப்படும் நிதியளிப்புக்களுக்கான வட்டி

(3) பங்குடமை ஏடுகள் (06 புள்ளிகள்)

பிரிவு *A* முடிவு

## பிரிவு B

இந்தப் பிரிவிலுள்ள ஐந்து (05) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

2016 யூலை 01 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட அமயா (தனியார்) கம்பனியின்** வியாபார சென்மதிகள் (கடன் கொடுத்தோர்) கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. 305,400/-.

**வரையறுக்கப்பட்ட அமயா (தனியார்) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்ட 2016 யூலை மாதத்திற்கான வியாபார சென்மதியாளர்கள் தொடர்பான ஊடுசெயல்கள் கீழ்வருமாறு :

| | **தொகை ரூ.** |
|---|---:|
| கடன் கொள்வனவுகள் | 135,900 |
| வெளித்திரும்பல்கள் | 16,000 |
| கடன்கொடுத்தோருக்குச் செலுத்திய தொகை | 103,000 |
| பெறப்பட்ட கழிவுகள் | 1,200 |

2016 யூலை 31 ஆந் திகதியில் வியாபாரச் சென்மதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது தனித்தனி வியாபாரச் சென்மதிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையுடன் இணங்கவில்லை. பின்னர் மேற்கொண்ட செவ்வை, வித்தியாசத்திற்கான காரணங்களாக கீழ்வருவனவற்றைக் காட்டியது.

(1) **வரையறுக்கப்பட்ட X கம்பனியிடமிருந்து** செய்யப்பட்ட கடன் கொள்வனவு ரூ. 20,000/- கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாக பதிவுசெய்யப்பட்டபோதிலும் **X கம்பனியின்** தனியான கணக்கில் பதிவுசெய்யப்பட வில்லை.

(2) வழங்குநர் **பெரேரா**வுக்கான காசுக் கொடுப்பனவு ரூ. 8,500/- கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டபோதிலும் உரிய தனியான வியாபார சென்மதியாளர் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) 2016 யூலை மாதத்திற்கான வியாபாரச் சென்மதியாளர் (கடன் கொடுத்தோர்) கட்டுப்பாட்டுக் கணக்கினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) 2016 யூலை 31 ஆந் திகதி வியாபாரச் சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை அதே தேதியிலுள்ள தனித்தனி வியாபார சென்மதியாளர் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையுடன் கணக்கிணக்கம் செய்யும் கூற்றினைத் **தயாரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**அஷான், ஹஷான்** மற்றும் **ரொஷான்** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 4:3:3 எனும் விகிதத்தில் பகிருகின்ற பங்குடமை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்கின்றது :

- எடுப்பனவுகள் மீது ஆண்டிற்கு 12% வட்டி அறவிடப்படும்.
- நடைமுறைக் கணக்கு மீதிகள் மீது வட்டி செலுத்தப்படுவதோ அல்லது அறவிடப்படுவதோ இல்லை.
- **ஹஷான்** ஆண்டிற்கு ரூ. 125,000/- சம்பளம் பெற உரித்துடையவராவார்.

கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2016 மார்ச் 31 ஆந் திகதி பங்குடமையின் பரீட்சை மீதியிலிருந்து கீழ்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன:

| | **வரவு (ரூ.'000)** | **செலவு (ரூ.'000)** |
|---|---|---|
| 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி நடைமுறைக் கணக்குகள்: | | |
| **அஷான்** | | 2,000 |
| **ஹஷான்** | 800 | |
| பங்காளர் எடுப்பனவுகள் : | | |
| **அஷான்** - 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி | 1,000 | |
| **ரொஷான்** -2015 அக்டோபர் 01 ஆந் திகதி | 500 | |

(2) 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் பகிர்வுக்கு முன்னரான நிகர இலாபம் ரூ. 3,500,000/-

**நீங்கள் செய்யவேண்டியது,**

2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் இலாப அல்லது நட்டப் பகிர்வுக் கணக்கினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

2016 டிசெம்பர் 31 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட சார்ம் கேக் கம்பனியின்** வங்கிக் கூற்று ரூ.53,029/- மேலதிகப் பற்றினைக் காட்டிய அதேவேளை கம்பனியின் காசேடு (வங்கியேடு) ரூ.15,274/- வரவு மீதியைக் காட்டியது.

வேறுபாட்டிற்கான காரணங்களாக கீழ்வருவன கண்டறியப்பட்டன :

(1) கீழ்வரும் காசோலை வைப்புக்கள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தேறியிருக்கவில்லை :

| **காசோலை இல.** | **வைப்புச் செய்த திகதி** | **தொகை (ரூ.)** |
|---|---|---|
| 321154 | 2016.12.28 | 156,200 |
| 265471 | 2016.12.31 | 24,675 |

(2) கம்பனியால் வழங்கப்பட்ட கீழ்வரும் காசோலைகள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை :

| **காசோலை இல.** | **வழங்கிய திகதி** | **தொகை (ரூ.)** |
|---|---|---|
| 628734 | 2016.12.25 | 3,274 |
| 628742 | 2016.12.28 | 115,248 |

(3) கணக்குப் பதிவாளர் ரூ. 67,945/- கொடுப்பனவுக்காக வழங்கிய காசோலை இல. 628730 இற்கான பெறுமதியை காசேட்டில் தவறுதலாக ரூ.. 69,745/- எனப் பதிவு செய்திருந்தார்.

(4) வங்கி 2016 டிசெம்பர் 31 இல் காசோலைப் புத்தகத்திற்காக அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூ.2,500/- காசேட்டில் பதியப்படவில்லை.

(5) 2016 டிசெம்பர் 31 இல் வங்கி ரூ. 5,250/- இனைத் தவறுதலாக **சார்ம் கேக் கம்பனியின்** வங்கிக் கணக்கில் செலவுப்பதிவு செய்திருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

**வரையறுக்கப்பட்ட சார்ம் கேக் கம்பனிக்கு** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியில் செம்மையாக்கப்பட்ட காசேடு (02 புள்ளிகள்)

(b) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட ஓரான் (தனியார்) கம்பனியானது,** 2013 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது அதன் வியாபாரத்தில் பயன்படுத்துவதற்காக கட்டடம் ஒன்றினை நிருமாணிப்பதற்கு கீழ்வரும் தொகைகளைச் செலவு செய்தது :

| | **ரூ. (‘000)** |
|---|---|
| தளம் (site) தயார்செய்தற் கிரயங்கள் | 870 |
| கட்டடப் பொருட்களும் கூலியும் | 1,590 |
| கட்டடப் பொருட்கள் - உள்வண்டிக்கூலி | 160 |
| தொழில்சார் கட்டணங்கள் (கட்டடக் கலைஞர், பொறியியலாளர், சட்ட) | 630 |
| 2014 ஆம் ஆண்டிற்கான மாநகர சபைச் சோலைவரி | 50 |

கட்டட நிருமாணம் 2013 மார்ச் 31 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட்டு 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து கட்டடம் பயன்பாட்டிற்குக் கிடைத்தது. கட்டடத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 50 ஆண்டுகளாக மதிப்பிடப் பட்டுள்ளதுடன் அது நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படும்.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

**(a)** 2013 ஏப்ரல் 01 ஆந் திகதி மேலுள்ள கட்டடத்தின் மூலதனப்படுத்தவேண்டிய தொகையைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) 2016 மார்ச் 31 ஆந் திகதி கட்டடத்தின் முன்கொணரற் தொகையைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 06

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **கிராமியத் துடுப்பாட்டக் கழகம்** தொடர்புபட்டதாகும் :

(1) கழகத்தின் சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு: *(ரூ.’000)*

| | **2015 டிசெம்பர் 31** | **2016 டிசெம்பர் 31** |
|---|---|---|
| காணி | 15,000 | 15,000 |
| துடுப்பாட்ட உபகரணம் | 4,400 | 4,100 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 5,500 | 6,480 |
| நிலுவையிலுள்ள அங்கத்துவச் சந்தா | 475 | ? |
| அடுத்த ஆண்டிற்காக முன்னதாகவே பெறப்பட்ட அங்கத்துவச் சந்தா | 200 | ? |

இந்த ஆண்டின்போது நிலையான சொத்துக்கள் எவையும் கொள்வனவு செய்யப்படவோ அல்லது விற்கப்படவோ இல்லை

(2) அங்கத்துவச் சந்தா :

— அங்கத்தவர் ஒருவரின் வருடச் சந்தா ரூ. 25,000/-.

— பதிவுகளின்படி 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி கழகத்தில் 50 அங்கத்தவர்கள் இருந்தனர்.

— 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது அங்கத்துவச் சந்தாவாக கழகம் பெற்ற தொகை ரூ. 1,550,000/-. இதில் ரூ. 150,000/- தொகை 2017 ஆம் ஆண்டு தொடர்பாகப் பெறப்பட்ட சந்தாவாகும்.

***நீங்கள் செய்யவேண்டியவை,***

(a) 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி திரண்ட நிதியினைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(b) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **கிராமிய துடுப்பாட்டக் கழகத்தின்** சந்தாக் கணக்கினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பிரிவு B முடிவு*

## <u>பிரிவு C</u>

இந்தப் பிரிவிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 07

2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **யுனைட்டற் கால்பந்தாட்டக் கழகத்தின்** கொள்ளல், கொடுத்தற் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது :

**கொள்ளல், கொடுத்தற் கணக்கு** *(ரூ.'000)*

| | | | |
|---|---|---|---|
| 2016 சனவரி 01 இல் மீதி | 6,800 | 2016 ஆண்டிற்கான வாடகை | 1,000 |
| நன்கொடைகள் | 700 | தொலைபேசிக் கட்டணம் | 450 |
| அங்கத்துவச் சந்தா | 7,700 | மின் கட்டணம் | 1400 |
| நடன இரவு 2016 அனுமதிச்சீட்டு விற்பனை | 2,100 | பயிற்சிக் கட்டணம் | 2,100 |
| | | நடன இரவு 2016 பொதுச் செலவுகள் | 850 |
| | | நடன இரவு 2016 பரிசுகள் | 300 |
| | | விளையாட்டு உபகரணம் (2016 டிசெம்பர் 31) | 3,400 |
| | | 2016 டிசெம்பர் 31 மீதி கீ.கொ.செ. | 7,800 |
| | **17,300** | | **17,300** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

கழகத்தின் ஏனைய சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு :

*(ரூ.'000)*

| | 2016 சனவரி 01 | 2016 டிசெம்பர் 31 |
|---|---:|---:|
| விளையாட்டு உபகரணங்கள் | 11,000 | 12,500 |
| நிலுவையிலுள்ள சந்தா | 600 | 400 |
| முன்னதாகப் பெறப்பட்ட சந்தா | 200 | 300 |
| அட்டுறு மின் கட்டணம் | 200 | 400 |
| நடன இரவு 2016 – வருமதியாகவுள்ள அனுமதிச்சீட்டு விற்பனை | - | 200 |
| நடன இரவு 2016 – சென்மதியாகவுள்ள பொதுச் செலவு | - | 140 |

பெறப்படும் நன்கொடைகள் அவை பெறப்பட்ட ஆண்டிலேயே வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும். 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியில் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணம் தவிர வேறெந்த நிலையான சொத்தும் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்படவோ அல்லது விற்பனை செய்யப்படவோ இல்லை.

***நீங்கள் செய்யவேண்டியது,***

***யுனைட்டற் கால்பந்தாட்டக் கழகத்தின்*** 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவினக் கணக்கினைத் ***தயாரிக்குக.*** (10 புள்ளிகள்)

## வினா 08

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் ***ரஷ்மி***க்குச் சொந்தமான உணவு விநியோகச் சேவையான ***ரசய் பூட்ஸ்*** வியாபார ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

(1) வியாபாரத்தின் சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு :

*(ரூ.'000)*

| | 2016 சனவரி 01 | 2016 டிசெம்பர் 31 |
|---|---:|---:|
| உணவு விநியோக உபகரணம் (முன்கொணரற் பெறுமதி) | 10,000 | 14,000 |
| விநியோக வான் (முன்கொணரற் பெறுமதி) | 15,000 | 13,000 |
| தொக்கு | 3,000 | 4,000 |
| காசுக் கையிருப்பு | 7,200 | 10,250 |
| வியாபார சென்மதிகள் | 6,000 | 8,000 |
| வியாபார வருமதிகள் | 5,000 | 6,000 |
| 8% கடன் | - | 5,000 |

(2) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது செய்யப்பட்ட கொடுப்பனவுகள் :

| | (ரூ.'000) |
|---|---:|
| கொள்வனவுகளுக்காக கடன்கொடுத்தோருக்குச் செலுத்தியது | 26,000 |
| கூலிகள் (ஊதியம்) | 6,150 |
| மின் கட்டணமும் காப்புறுதியும் | 3,800 |

(3) எல்லாக் கொள்வனவுகளும் விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

(4) விற்பனை விலையினைத் தீர்மானித்தலில் ***ரசய் பூட்ஸ்*** கிரயத்தில் 50% மொத்த இலாபம் வைத்து விலை குறிப்பிடுகின்றது.

(5) 2015 யூலை 01 ஆந் திகதி **ரசய் பூட்ஸ்** சில உணவு விநியோக உபகரணங்களை ரூ. 5,000,000/- கிரயத்தில் கொள்வனவு செய்தது. இதற்கு நிதியளிப்புச் செய்வதற்காக அது மூன்றாவது ஆண்டின் முடிவில் முழுக் கடனும் மீளச் செலுத்தவேண்டிய ஒரு கடனைப் பெற்றிருந்தது. எவ்வாறாயினும், இந்தக் கடன் மீது 8% வருடாந்த வட்டி ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் செலுத்தப்பட வேண்டும்.

(6) இந்த ஆண்டின்போது **ரஷ்மி** ரூ. 500,000/- இனைத் தமது தனிப்பட்ட தேவைக்காக எடுத்திருந்தார்.

***நீங்கள் செய்யவேண்டியவை,***

தனியுரிமையாளர் வியாபாரமான **ரசய் பூட்ஸ்** க்கு கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று (07 புள்ளிகள்)

(b) 2016 டிசெம்பர் 31 இல் நிதிநிலைக் கூற்று (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

**ரொஷாந்த, நிஷாந்த** மற்றும் **லசந்த ஆகியோர் "ரொனில் கன்சல்டன்ஸ்"** எனும் பெயரில் விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு சம்பந்தப்பட்ட பங்குடமை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்கிறது :

(1) இலாப, நட்டம் **ரொஷாந்த, நிஷாந்த** மற்றும் **லசந்த** ஆகியோருக்கிடையில் முறையே 5 : 2 : 3 எனும் விகிதத்தில் பகிரப்படும்.

(2) பங்காளர்கள் தமது மூலதனக் கணக்கு மீதிகளில் ஆண்டிற்கு 5% வட்டி பெற உரித்துடையவராவர்.

(3) வியாபாரத்தினை முகாமை செய்வதற்காக **ரொஷாந்த** மாதாந்தம் ரூ. 35,000/- சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

வியாபார ஏடுகளிலிருந்து 2016 மார்ச் 31 ஆந் திகதியில் கீழ்வரும் பரீட்சை மீதி பிரித்தறியப்பட்டது :

| | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| பகிர்வுக்கு முன்னர் நிகர இலாபம் | | 25,400 |
| 2015 ஏப்ரல் 01 இல் பங்காளர் மூலதனக் கணக்கு : | | |
| **ரொஷாந்த** | | 10,500 |
| **நிஷாந்த** | | 6,000 |
| **லசந்த** | | 9,000 |
| 2015 ஏப்ரல் 01 இல் பங்காளர் நடைமுறைக் கணக்கு: | | |
| **ரொஷாந்த** | 50 | |
| **நிஷாந்த** | 160 | |
| **லசந்த** | 330 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் : | | |
| காணியும் கட்டடமும் | 51,250 | |
| மோட்டார் வாகனம் | 2,500 | |
| 2016 மார்ச் 31 இல் திரள் தேய்மானம் : | | |
| கட்டடம் | | 3,000 |
| மோட்டார் வாகனம் | | 1,250 |
| வங்கி மீதி | 242 | |
| தொக்கு | 656 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 3,610 | 4,288 |
| **நிஷாந்த**வுக்கு கடன் - **(குறிப்பு 01)** | 700 | |
| அட்டுறு செலவுகள் | | 60 |
| **மொத்தம்** | **59,498** | **59,498** |

**<u>குறிப்பு 01</u>**

2015 செப்ரெம்பர் 30 ஆந் திகதி **நிஷாந்த** ரூ. 700,000/- இனை பங்குடமையிலிருந்து கடனாகப் பெற்றார். இந்தக் கடனுக்கு ஆண்டிற்கு 10% வட்டி அறவிடுவதற்கு இணங்கப்பட்டது. இந்தக் கடன் மீதான வட்டி கணக்கேடுகளில் பதியப்படவில்லை.

***நீங்கள் செய்யவேண்டியவை,***

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிரல் வடிவில் பங்காளர் நடைமுறைக் கணக்கு (05 புள்ளிகள்)

(b) 2016 மார்ச் 31 இல் நிதிநிலைக் கூற்று (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பிரிவு C முடிவு*

## <u>பிரிவு D</u>

இந்தப் பிரிவிலுள்ள ஒரேயொரு வினாவுக்கு விடை தருக.

(25 புள்ளிகள்)

### வினா 10

2016 மார்ச் 31 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட வெப்வப்ஸ் (தனியார்) கம்பனியின்** பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது :

*(ரூ.'000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (200,000 சாதாரண பங்குகள்) | | 2,000 |
| கைக்கொள் இலாபம் - 2015 ஏப்ரல் 01 இல் | 4,860 | |
| பொது ஒதுக்கம் | | 500 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| மோட்டார் வாகனங்கள் | 8,500 | |
| எந்திரம் | 6,400 | |
| தளபாட, இணைப்புக்கள் | 3,000 | |
| திரள் தேய்மானம் - 2015 ஏப்ரல் 01 இல் : | | |
| மோட்டார் வாகனங்கள் | | 2,125 |
| எந்திரம் | | 2,400 |
| தளபாட, இணைப்புக்கள் | | 1,800 |
| தொக்குகள் - 2016 மார்ச் 31 இல் | 2,460 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 3,910 | 1,873 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 250 | |
| 12% தனிச்சங்கள் | | 5,000 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | 250 | |
| விற்பனை | | 38,520 |
| விற்பனைக் கிரயம் | 15,646 | |
| நிருவாகச் செலவுகள் | 3,545 | |
| விநியோகச் செலவுகள் | 2,066 | |
| நிதிச் செலவுகள் | 331 | |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 3,000 | |
| | **54,218** | **54,218** |

கீழ்வரும் தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) 2015 செப்ரெம்பர் 30 ஆந் திகதி கம்பனி ஒவ்வொன்றும் ரூ. 100/- ஆன 50,000 எண்ணிக்கையான தனிச்சங்களை வழங்கியது. 12% வருடாந்த வட்டி ஆண்டிற்கு இரு தடவை செலுத்தப்படும். 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த அரையாண்டிற்கான வட்டி 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி செலுத்தப்பட்டது.

(2) 2016 மார்ச் 20 ஆந் திகதி இரவு ஏற்பட்ட வெள்ளத்தால் ரூ. 750,000/- கிரயமான தொக்குகள் முற்றாக அழிவடைந்தன. 2016 மார்ச் 31 ஆந் திகதி காப்புறுதிக் கம்பனி இந்த அழிவு பற்றி ஆராய்ந்து, இழப்பீடாக அழிவடைந்த தொக்குக் கிரயத்தின் 80% இனைச் செலுத்துவதற்கு இணங்கியது. இவை சம்பந்தமாக கணக்கேடுகளில் எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படும். சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | : | 4 ஆண்டுகள் |
| எந்திரம் | : | 8 ஆண்டுகள் |
| தளபாட, இணைப்புக்கள் | : | 5 ஆண்டுகள் |

(4) 2016 மார்ச் 31 ஆந் திகதியில் கீழ்வரும் அட்டுறு மற்றும் முற்கொடுப்பனவுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் :

| | அட்டுறு (ரூ.) | முற்கொடுப்பனவு (ரூ.) |
|---|---|---|
| காப்புறுதி | - | 8,000 |
| கணக்காய்வுக் கட்டணம் | 70,000 | - |

(5) வருமதியாகவுள்ள ஐயுறவுக் கடன் மீதிகளுக்காக ரூ.350,000/- ஏற்பாடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

(6) வரிமதிப்பாண்டு 2015/16 க்கு வருமான வரிப் பரிப்பு ரூ. 3,200,000/- ஆக மதிப்பிடப்பட்டது. முன்னைய வரிமதிப்பாண்டில் வருமானவரிப் பரிப்பு இல்லை. கம்பனி சுயமதிப்பீட்டின் கீழ் வரிமதிப்பாண்டு 2015/16 க்கு ரூ. 3,000,000/- செலுத்தியது.

(7) நிதிக் கூற்றுக்கள் வழங்குவதற்காக பணிப்பாளர் சபையினால் 2016 மே 21 இல் அங்கீகரிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

முகாமைத் தேவைக்காக **வரையறுக்கப்பட்ட வெப்வப்ஸ் (தனியார்) கம்பனிக்கு** கீழ்வருவனவற்றைத் தயாரிக்குக :

(a) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (12 புள்ளிகள்)

(b) 2016 மார்ச் 31 ஆந் திகதி நிதிநிலைக் கூற்று (13 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பிரிவு D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01<br>கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02<br>பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03<br>பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |